DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 292/2022

Prosecution Witness - D.W. 1

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கணபதி |
| Father's Name | : | |
| Village | : | காக்கமூர் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | வழக்கறிஞர் |
| Age | : | 51 |
| Date | : | 24.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2025.

(2 ஆம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 1 மற்றும் 3 ஆம் எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

<u>24.09.2025</u>

**<u>முதல் விசாரணை (1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பில்) :-</u>**

நான் சுசீந்திரம் காக்கமூரில் வசிக்கிறேன். 01.05.2017 அன்று வீட்டிலிருந்து கிளம்பி மருங்கூர் முருகன் கோவிலுக்கு செல்லும்போது மாலை 4.30 மணியளவில் நல்லூர் அருகே வந்து கொண்டிருந்தேன். நல்லூர் சி.எஸ்.ஐ சர்ச் பஸ் ஸ்டாண்ட் அருகில் ஒரு அம்மா சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் வண்டியை நிறுத்தி

பார்த்தேன். அப்போது இரண்டு S.I. இரண்டு பையன்மார்களை பிடித்து வைத்திருந்தார்கள். கொஞ்ச நேரம் பார்த்து கொண்டிருந்தேன். போலீஸ் ஜீப் வந்து அவர்களை ஏற்றிக் கொண்டு போய்விட்டது. அங்கே விசாரித்தேன். காலையில் சுசீந்திரத்தில் யாரோ ஒருவரிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அதனால் அண்ணன் தம்பியை பிடித்து கொண்டு போகிறார்கள் என்றும் சொன்னார்கள். அவர்கள் இருவரில் ஒருவருக்கு உதட்டில் அடிப்பட்டிருந்தது. நான் அங்கு நின்று கொண்டிருந்ததால் போலீசார் என்னுடைய முகவரியை எழுதி கேட்டார்கள். நான் கொடுத்தேன். சாட்சிக்கு கூப்பிட்டால் வர முடியுமா என்று கேட்டார்கள். வரமுடியும் என்று சொன்னேன். மூன்று நாட்களுக்கு முன்னர் போலீசார் என்னிடம் வந்து இன்றைய தினம் வழக்கு Hearing இருப்பதாகவும் பார்த்ததை சொல்லுமாறும் சொன்னார்கள். அந்த அண்ணன் தம்பிகளின் பெயர் ஒருவர் பெயர் வரதராஜன், மற்றொருவர் பெயர் தெரியவில்லை.

**<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :-</u>**

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.